ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 2 | மே 1997 | கானம் : 10

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 2 மே 1997 கானம் : 10

## விஷய ஸூசிகை

பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 18 | 5 |
| 3. | பால முகுந்தாஷ்டகம் | 7 |
| 4. | திருமங்கையாழ்வார் வைபவம் | 9 |
| 5. | வேத கதைகள் - 1 | 15 |
| 6. | ஸ்ரீ குருஜியிடம், பக்தர்கள் அவ்வப்பொழுது கேட்ட கேள்விகளும், அதற்கு ஸ்ரீ குருஜி அளித்த பதில்களும் - தொடர்ச்சி | 17 |
| 7. | ஸ்ரீ க்ருஷ்ணன், தன் பக்தர்களை கை விடுவதில்லை | 20 |
| 8. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 21 | 27 |
| 9. | நாம ஸங்கீர்த்தனம் | 30 |
| 10. | செய்திகள் | 31 |
| 11. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



ஸ்ரீ மஹா பெரியவாளின் 99வது ஜயந்தி மஹோத்ஸவத்தில் ப்ரஹ்மஸ்ரீ P.S. அனந்தநாராயண வாஜபேயி அவர்களுக்கு 'சநாதன தர்ம ரக்ஷக ரத்னம்'' என்ற விருதளிக்கப்படுகிறது.

ஸ்ரீ ஹரி :

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

ராகம் : மனோலயம் தாளம் : ஆதி

பல்லவி

*கோவிந்தபுரம் என்று செல்வேனோ - நான்*
*கோவிந்தபுரம் என்று செல்வேனோ (கோவிந்த)*

சரணங்கள்

*காவிரி கரையில் காஷாய உடையில்*
*கலியுக வரதனாம் போதேந்த்ர யதீந்த்ரனின்*
*கமல சரணத்தை - தரிசனம் செய்ய (கோவிந்த)*

*தாரக நாமமே ரக்ஷிக்கும் மந்திரம்*
*ஆத்மா ராமனிடம் ரமித்திடச் செய்யும்*
*என சித்தாந்தம் - அருளியவரைக் காண (கோவிந்த)*

*காமகோடி பீடத்தில் காருண்ய மூர்த்தியாய்*
*வேத வேத்யனாய் வேதாந்த ஸாரமாய்*
*அவதாரம் செய்திட்ட - ஸத்குருவை காண (கோவிந்த)*

*ஆத்ம போதேந்த்ராள் ஆப்த சிஷ்யராம்*
*அத்வைத ரஸிக அத்புத மூர்த்தியாம்*
*ஸதா ராம நாமத்தில் லயிக்கும் - குருவை காண (கோவிந்த)*

*மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிக்கு*
*பாகவத தர்மத்தை உத்தாரணம் செய்ய*
*ஆக்ஞை அருளிய - குருநாதன் தாள் பணிய (கோவிந்த)*

*முரளீதரன் சித்தத்தை திருடி சித்ஸ்வரூபத்தில்*
*சேர்த்திட்ட சத்யமான குருநாதா உனை காண*
*சேர்த்திட்ட சத்யமான குருநாதா உனை காண (கோவிந்த)*



18

திருவண்ணாமலை க்ஷேத்ரம், ஸ்ரீ குருஜி அடிக்கடி விரும்பி செல்லும் க்ஷேத்ரங்களில் ஒன்று. இந்த க்ஷேத்ரத்தில் உள்ள ஒவ்வொரு பசு, பக்ஷிகளிலும் சிவ ஸாந்நித்யம் உள்ளது என்று சொல்வார் ஸ்ரீ குருஜி. அநேகமாக, திருவண்ணாமலை செல்லும் ஒவ்வொரு ஸமயங்களிலும் கிரி ப்ரதக்ஷிணம் செய்வார். சில ஸமயங்களில் பக்தர்களுடன் செல்வார். அந்த ஸமயங்களில், நாம ஸங்கீர்த்தனம் செய்து கொண்டும், பரமேஸ்வரனுடைய பெருமைகளை பேசிக்கொண்டும் செல்வார். சில ஸமயங்களில் மௌனமாக தனியாகவும் சென்று வருவார்.

அப்பொழுது மலை மேல் சென்று, பல இடங்களில் அமர்ந்து ஆனந்தப்படுவார். அங்குள்ள குகைகளில் அமர்ந்து பல மணி நேரம் தியானம் செய்வார். பிறகு கோவிலுக்குச் சென்று அங்குள்ள ஸாதுக்களின் நடுவே பல மணி நேரம் தங்குவார்.

அருணாசலேஶ்வரர் சன்னதியிலிருந்து அபிதகுசாம்பிகை சன்னதிக்கு செல்லும் பொழுது அந்த மலையின் ரூபம் பார்ப்பதற்கு மிகவும் அழகாக தெரியும். அதைப் பார்த்துப் பார்த்து மிகவும் ஆனந்தப்படுவார். ப்ரதோஷ காலங்களில் கிரி ப்ரதக்ஷிணம் செய்வார். ஒரு ஸமயம், சனிக்கிழமை அன்று ப்ரதோஷம் வந்தது. சனி ப்ரதோஷம் மிகவும் விசேஷம் என்பதால் அன்று கிரி ப்ரதக்ஷிணம் செய்து வில்வத்தினால் ருத்ர த்ரிசதி அர்ச்சனை செய்து கிரியை பூஜித்தார்.

ஒரு சமயம், ராமச்சந்திரன் என்ற பக்தர் ஸ்ரீ குருஜியுடன் கிரி ப்ரதக்ஷிணம் செய்ய ஆசைப்பட்டார். அந்த ஸமயம் நல்ல கடுமையான வெய்யில் காலம். ராமச்சந்திரன், ஸ்ரீ குருஜியுடன் ப்ரதக்ஷிணம் வரும் பொழுது, 'வெய்யில் மிகவும் கடுமையாக உள்ளதே, நடக்க முடியவில்லையே' என்று சொல்லி தவித்தார். ஸ்ரீ குருஜியிடம் அவர், 'வெய்யில் தணிந்தால் தேவலையே' என்று கேட்டார். உடனே எங்கிருந்தோ மேகங்கள் வந்தது. வெய்யிலின் கடுமை குறைந்தது. கொஞ்சம் கொஞ்சமாக குளிர்மையான காற்று வீச ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் கொஞ்சம் தூறலும் ஆரம்பித்தது. ப்ரதக்ஷிணம் முடியும் ஸமயத்தில் நன்றாக மழையே பெய்தது. ராமச்சந்திரன் மிகவும் சந்தோஷப்பட்டார். ஸ்ரீ குருஜி, 'எல்லாம் அருணாசலேஸ்வரர் க்ருபை' என்று கூறி ஆனந்தப்பட்டார்.

(தொடரும்)

– ஜயந்தி ஜானகிராமன்



# பால முகுந்தாஷ்டகம்

*கராரவிந்தேன பதாரவிந்தம்*
*முகாரவிந்தே விநிவேஶயந்தம் ।*
*வடஸ்ய பத்ரஸ்ய புடே ஶயானம்*
*பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி ॥* 1

தாமரை போன்ற கையினால், தாமரை போன்ற சரணத்தை தாமரை போன்ற முகத்தில் வைத்துக் கொள்கின்றவரும், ஆலிலை மேல் பள்ளி கொண்டவருமான பால முகுந்தனை மனதினால் நினைக்கிறேன்.

*ஸம்ஹ்ருத்ய லோகான் வடபத்ரமத்யே*
*ஶயானமாத்யந்த விஹீனரூபம் ।*
*ஸர்வேஶ்வரம் ஸர்வஹிதாவதாரம்*
*பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி ॥* 2

ஸர்வ லோகங்களையும் ஸம்ஹரித்து ஆலிலையின் மத்தியில் சயநித்திருப்பவரும், ஆதி அந்தம் அற்ற உருவத்தை உடையவரும், எல்லோருக்கும் ஈஸ்வரனும், எல்லோருடைய நன்மையை பொருட்டு அவதாரம் செய்தவருமான பால முகுந்தனை மனதினால் ஸ்மரிக்கிறேன்.

*இந்தீவரஶ்யாமள கோமளாங்கம்*
*இந்த்ராதிதேவார்ச்சிதபாதபத்மம் ।*
*ஸந்தானகல்பத்ருமமாஶ்ரிதானாம்*
*பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி ॥* 3

நீலோத்பல புஷ்பம் போல் கருமையும், அழகும் வாய்ந்த சரீரத்தை உடையவரும், இந்திரன் உள்ளிட்ட அனைத்து தேவர்களால் பூஜிக்கப்பட்ட பாத கமலத்தை உடையவரும், அண்டியவர்களுக்குப் புத்ர லாபத்தை கொடுக்கும் கல்பக விருக்ஷம் போன்றவருமான பால முகுந்தனை மனதினால் ஸ்மரிக்கிறேன்.

*லம்பாலகம் லம்பிதஹாரயஷ்டிம்*
*ஶ்ருங்காரலீலாங்கிததந்தபங்க்திம் ।*
*பிம்பாதரம் சாருவிஶாலநேத்ரம்*
*பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி ॥* 4

முன்புறத்தில் தொங்குகின்ற கேசங்களை உடையவரும், தொங்குகின்றதும், நீண்டதுமான ஹாரத்தை உடையவரும், ச்ருங்கார ரஸத்துடன் கூடிய அழகிய பற்களின் வரிசையை உடையவரும், கோவைப்பழம் போன்ற உதட்டை உடையவரும், அழகியதும்

விசாலமான கண்களை உடையவருமான பால முகுந்தனை மனதினால் ஸ்மரிக்கிறேன்.

*ஶிக்யே நிதாயாத்யபயோததீநி*
*பஹிர்கதாயாம் வ்ரஜநாயிகாயாம் ।*
*புக்த்வா யதேஷ்டம் கபடேன ஸுப்தம்*
*பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி ॥* 5

யசோதையானவள் உறியில் நல்ல பால், தயிர் இவைகளை வைத்துவிட்டு வெளியே சென்றபொழுது, அவைகளை தன் இஷ்டத்திற்கு சாப்பிட்டுவிட்டு, தூங்குவது போல் கபடம் செய்யும் பால முகுந்தனை மனதினால் ஸ்மரிக்கிறேன்.

*களிந்த ஜாந்தஸ்திதகாளியஸ்ய*
*பணாக்ரரங்கே நடனப்ரியந்தம் ।*
*தத்புச்சஹஸ்தம் ஶரதிந்துவக்த்ரம்*
*பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி ॥* 6

காளிந்தீ என்னும் மடுவில் இருக்கிற காளியன் என்ற பாம்பின் படமாகிய அரங்கத்தில் நடனம் செய்வதில் ப்ரியம் உள்ளவரும், காளியனுடைய வாலின் நுனியைக் கையில் வைத்துக் கொண்டவரும் சரத் காலத்து சந்திரனைப் போன்ற முகம் உடையவருமான பால முகுந்தனை மனதினால் ஸ்மரிக்கிறேன்.

*உலூகலே பத்தமுதாரஶௌர்யம்*
*உத்துங்கயுக்மார்ஜுன பங்கலீலம் ।*
*உத்புல்லபத்மாயதசாருநேத்ரம்*
*பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி ॥* 7

உரலில் கட்டப்பட்டவரும், மஹா சூரரும், மிகவும் உயர்ந்த இரண்டு மருத மரங்களை கீழே வீழ்த்துதல் என்ற விளையாட்டை செய்கின்றவரும், மலர்ந்த செந்தாமரை போன்ற நீண்ட அழகிய கண்களை உடையவருமான பால முகுந்தனை மனதினால் ஸ்மரிக்கிறேன்.

*ஆலோக்ய மாதுர்முகமாதரேண*
*ஸ்தன்யம் பிபந்தம் ஸரஸீருஹாக்ஷம் ।*
*ஸச்சின்மயம் தேவமனந்தரூபம்*
*பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி ॥* 8

அன்பாக, அன்னையின் முகத்தைப் பார்த்து ஸ்தன்ய பானம் செய்கின்றவரும், செந்தாமரைப் போன்ற இரு கண்களை உடையவரும், ஸத்ரூபியும், சித்ரூபியும், வெகு ரூபங்களை உடையவரும், தேவருமான பால முகுந்தனை மனதினால் ஸ்மரிக்கிறேன்.

श्री हरि:

## குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்

சென்னை-600 083.

## மதுரமுரளி வருட சந்தா

"மதுரமுரளி"க்கான தங்களது வருட சந்தா, ஜூன் '97 இதழுடன் முடிவடைகிறது.

"குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்" என்னும் பெயரில், ரொக்கம் / MO / காசோலை / DD யாக ரூ. 60 - ஐ தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண், உள்ளிட்ட விவரங்களுடன் உடனே அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

*அனுப்ப வேண்டிய முகவரி :*

**மதுரமுரளி,**

திரு. V. சங்கரன்

5/3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,

கே.கே. நகர், சென்னை -600 078.

---

(இதை பூர்த்தி செய்து அனுப்பவும்)

சந்தா எண் : ______________

பெயர் : ______________________________

முகவரி : ______________________________

______________________________

______________________________

Pin Code : ______________

காசோலை / DD எண். : ______________

வங்கி பெயர் : ______________________________

தேதி : ______________

கையொப்பம் : ______________________________

# திருமங்கையாழ்வார் வைபவம்

*வ்ருஶ்சிகே க்ருத்திகா ஜாதம் சதுஷ்கவிசிகாமணிம்*
*ஷட்ப்ரபந்தக்ருதம் ஶார்ங்கமூர்த்திம் கலிஹமாஶ்ரயே*

திருமாலின் வில்லான சார்ங்கத்தின் அம்சமாய், சோழநாட்டில் திருமங்கை என்னும் பகுதியில், திருவாலி நாடு (திருநகரி) என்னும் திருப்பதியருகே உள்ள திருக்குறையலூரில், கள்ளக்குடியில், கலியுக வருஷம் 398 ஆவதான நள வருடத்தில், பூர்ணிமை, வியாழக்கிழமை க்ருத்திகை நட்சத்திரத்தில், கார்த்திகை மாதத்தில் திருமங்கையாழ்வார் திருஅவதாரம் செய்தார்.

சோழநாட்டின் சேனைத் தலைவர்களுள் ஒருவரான இவர் தந்தை, ஒரு சிறந்த சிவ பக்தர்; பெற்றோர் இவருக்கு 'நீலன்' என்று நிறங்கொண்டு பெயரிட்டனர். குழந்தை சீறும் சிறப்புடன் சிறந்தோங்கி குடிப்பிறப்புக்கேற்ப போர்த் தேர்ச்சி பெற்று சிறந்த வீரனாக திகழும் காலத்தில், அரசனுக்காக பல போர்களில் சேனைத் தலைவனாக பொறுப்பேற்று வெற்றி பெற்றதனால் அரசன் மகிழ்ந்து, திருமங்கை என்னும் நாட்டின் மன்னனாக இவரை ஆக்கினான். இவர், பகைவருக்கு யம பயம் ஏற்படுத்தி வந்ததால் 'பரகாலன்' என்ற பெயரோடு விளங்கி வந்தார். சிற்றரசன் என்ற முறையில் இவர் சோழ அரசனுக்குக் கப்பம் செலுத்தி வந்தார்.

அந்நாட்டில், திருவெள்ளக்குளம் என்னும் திருப்பதியிலுள்ள தாமரைப் பொய்கையில் நீராட வந்த தேவமாதர்களில் ஒருத்தி, பகவத் ஆக்ஞையினால், ஏனையோரை விட்டு, மனித உருக்கொண்டு, குமுதமலர் கொய்யும் சிறுமியாக நின்றாள். அவ்வழி வந்த மலடனான வைணவ வைத்தியனொருவனைத் தன்னைப் பாதுகாக்க வேண்டினாள். அவனும் இசைந்து, அச்சிறுமியை தன் வீட்டிற்கு கொண்டுச் சென்று 'குமுதவல்லி' என்று பெயரிட்டு வளர்க்கலானான்.

உரிய பருவத்தில், அவர்கள் 'குமுதவல்லியை' திருமணம் செய்விக்க விரும்பியபோது, ஒற்றர்கள் மூலம் குமுதவல்லியின் குண நலன்களின் சிறப்பை அறிந்த மங்கை மன்னன், வைத்தியனிடம் சென்று அவளைத் தனக்கு மணம் செய்விக்க வேண்டினார்.

அதற்கு குமுதவல்லியோ, ''பஞ்ச ஸம்ஸ்காரம்'' என்ற ஐவகை சிறப்புடைய வைணவரையே தாம் மணக்க இருப்பதாக சொல்லி மறுத்து விட்டாள். திருமங்கை மன்னனும், திருநாங்கூரிலிருந்து

திருநறையூருக்குச் சென்று, வேண்டி, அவ்வூரில் கோயில் கொண்டுள்ள நம்பியிடமிருந்து திருவாழி திருச்சங்கிலச்சினைப் பெற்றும், திருக்கண்ணபுரத்தம்மானிடம் திருமந்திரோபதேசம் பெற்றும், பன்னிரு திருமண்காப்புகளணிந்து, மீண்டும் குமுதவல்லியிடம் சென்று மணம் புரிய வேண்டினார். அப்பொழுது குமுதவல்லி, மன்னனிடம், 'ஆயிரத்தெட்டு திருவைஷ்ணவர்களுக்கு நாடோறும், ஓராண்டு காலம் திருஅமுது செய்வித்து, அவர்களின் திருவடிகளின் ஜலத்தை உட்கொள்ள இசைந்தால் மணம் புரிய தயார்' என்று உரைத்தாள்.

மங்கை மன்னன் இதற்கும் இசைந்து வாக்களிக்க, திருமணம் சிறப்பாக நடந்தேறியது. மங்கைமடம் என்ற இடத்தில் வைணவர்களுக்கு அமுதளிக்க ஏற்பாடு செய்து, பெருந்தோட்டம் என்ற இடத்தில் வாழை முதலிய காய், கனிகளுக்குத் தோட்டம் அமைத்து திருமங்கை மன்னன் வைணவ அடியார்களின் ததி ஆராதனை கைங்கர்யத்தில் சிறப்புற ஈடுபட்டார்.

இதற்காக, நிறைய பொருள் வேண்டியிருந்தமையால் மங்கை மன்னன், சோழ அரசனுக்கு கப்பம் செலுத்த இயலாமல் போயிற்று. அதனால், சோழ அரசன் தன் ஏவலாளர்களை அனுப்பினான். அவர்களிடம் தவணைக் கேட்டு தாமதித்ததால், அரசன் தன் சேனைத் தலைவனை அனுப்பினான். சேனைத் தலைவன் இவரைப் பிடிக்க முயலுகையில், இவர் 'ஆடல்மா' என்ற தன் சிறந்த குதிரையின் மீதேறி அவனுடன் போர்புரிந்து, அவனை புறமுதுகிட்டோடச் செய்தார். பிறகு அரசன், தானே சேனையுடன் நேரில் வந்து வளைக்க, பரகாலரும் மிக்க வலிமையோடு முன்போல் எதிர்த்து போரிடத் தொடங்கினார். பரகாலனின் தோள் வலிமையைக் கண்ட சோழ அரசன், அவனை சூழ்ச்சியால்தான் தலை வணங்க வைக்க முடியும் என்றுணர்ந்து, பரகாலனை அருகில் அழைத்துப் பாராட்டி, தன் கடமையை தவறுவது அழகா என்று வினவி, தன் அமைச்சனிடம் பரகாலனை ஒப்புவித்து கப்பப் பணம் தந்தால்தான் விடுவிப்பதாகச் சொல்லிச் சென்றான்.

திருநறையூர் ஆலயச்சிறையில் வாடிய திருமங்கை மன்னன் வருத்தத்திலிருக்கும் போது, கச்சியம்பதி இறைவன் வரதராஜ பெருமாள், இவர் கனவில் தோன்றி, காஞ்சியில் செல்வம் கிட்டும் என்று கூற, திருமங்கை மன்னன் அமைச்சரிடம் சொல்லி, யவனுடன் சென்று காஞ்சியடைந்தான். கச்சியம்பதி பரகாலனின் கனவில் வந்து வேகவதி ஆற்றங்கரையில் நிதி புதையுண்டு கிடப்பதைக் காட்ட, அங்ஙனமே அவ்விடம் சென்று நிதியைத் தோண்டி எடுத்தார்.

பரகாலர், சோழ அரசனுக்கு கப்பம் கட்ட வேண்டிய பணத்தைக் கட்டி, எஞ்சியதை வைணவ பாகவதர்களின் ஆராதனைக்கு பயன்படுத்தினார். சோழ அரசனும் இவ்விஷயங்களை எல்லாம் அறிந்து கப்பப் பணத்தையும் மேலும் பல பொருட்களையும் சேர்த்து இவருக்கு வழங்கினான். தன் பொருட்கள் அனைத்தையும் அடியார்களுக்காக செலவழித்த பின், மேலும் பொருள் வேண்டியிருந்ததால், தன் தோழர்களான நீர்மேல் நடப்பான், நிழலிலொதுங்குவான், தாளூதுவான், தோலாவழக்கன் என்ற நால்வரின் துணைக் கொண்டு வழிப்பறிச் செய்து, திருவைணவர்களுக்கு கைங்கரியம் செய்வதை தொடர தீர்மானித்தார். இவ்வாறு திருமணங்கொல்லையில் உள்ள அரச மரத்தின் அடியில் பதுங்கியிருந்து வழிப்பறியும் செய்யலானார்.

இவருடைய அடியார்க்கடிமையைக் கண்டளவில், அன்புற்ற இறைவன், இவர்க்கருள் புரிய எண்ணி, தாயாருடன் திருமணக் கோலத்தில் சிறந்த அணிகலன்களுடன், இவர் பதுங்கி நிற்கும் வழி வந்தான். திருமணங்கொல்லையில் பதுங்கியிருந்த பரகாலர், தன் துணைவர்கள் உதவி கொண்டு வழிப்பறி செய்தார். எல்லா ஆபரணங் களையும் கழற்றி தந்த பெருமான், காலிலிருந்த திருவடி மெட்டியைத் தராததால், தான் கழற்ற முயன்றும், முடியாமல் போக, அதைத் தன் பற்களால் கடித்துப் பார்க்க, மணமகனான பெருமாள், இவரை ''கலியனோ, வரியவனோ'' என்றழைத்தார்.

வழி பறித்த பொருட்களையெல்லாம் மூட்டையாகக் கட்டியெடுக்க முயன்றபோது, மூட்டை இடம் பெயராமையால், பரகாலர், மணமகனைப் பார்த்து ''என்ன மந்திரம் செய்தாய்?'' என்று கேட்டு வாளை வீசி மிரட்டினார். மணமகனான எம்பெருமான், மந்திரத்தைக் கூறுவதாக அருகிலழைத்து, பெரிய திருமந்திரம் என்னும் திருஅஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்து பெரிய திருவடியின்மேல் பிராட்டியுடன் இவர் முன் தோன்றியருளினான். மெய்ப்பொருள் உணர்ந்து தெளிந்த பரகாலர், இறைவனை நோக்கி ''வாடினேன் வாடி வருந்தினேன்'' என்று தொடங்கிப் பாடலுற்று, தன் களவுத் தொழிலை விட்டு, திருப்பதிகள் பலவற்றை அடைந்து பாசுரங்கள் சேவிக்கலானார். வட மொழி வேதங்கள் நான்குக்கொப்பான நம்மாழ்வார் அருளிச்செய்த ஆறு அங்கங்கள் போன்று, பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய மடல், பெரிய மடல் என்னும் ஆறு திவ்ய நூல்களை அருளி, *திருமங்கையாழ்வார்* என்று திருநாமம் பெற்றார்.



இவ்வாறு, பெரிய திருமொழிப் பாடல்களை இயற்றி பல திருப்பதிகளுக்குச் செல்லும் பொழுது, சீர்காழியில் விருதூதிச் செல்லும் இவர்தம் குழுவைக்கண்டு, ஞான சம்பந்தர் என்ற சைவக் குரவரின் சீடர்கள் தடுக்க, ஆழ்வார், ''ஒரு குறளாய்'' என்று தொடங்கிப் பாடினார். ஆழ்வார், விண்ணகரெம்பெருமானைப் பாடக் கேட்டு மகிழ்ந்த ஞான சம்பந்தர், ஆழ்வாருக்கு தன் *'வேலை'* அன்பளிப்பாக நல்கி வணங்கி நின்றார்.

இவ்வாறு நாற்கவி பெருமான் என்ற சிறப்புப் பெயர் கொண்ட திருமங்கையாழ்வார் ஆலிநாடன், அருள்மாரி, அரட்டமுக்கி, அடையாசீயம், கொங்குமலர்க் குழலியர்வேள், மங்கைவேந்தன், கொற்றவேல் பரகாலன், கலியன் என்றெல்லாம் பல நாமம் கொண்டு விளங்கினார்.

இவ்வாழ்வார், திருவரங்கநாதன் ஆணைப்படி, அப்பெருமானுக்கு மண்டபம், கோபுரம், விமானம், ப்ராகாரம் முதலிய பணிகளைச் செய்ய திருநாகையில், விகாரம் ஒன்றில் இருந்த பொற்சிலையை, அதற்கு மேலுச்சியில் சுழன்று வந்த இயந்திரத்தை வாழைத்தண்டுகளால் சிக்க வைத்து நிறுத்தி, அதனுள் புகுந்து

*''ஈயத்தாலாகாதோ இரும்பினாலாகாதோ...*
*மதித்தென்னைப் பண்ணுகைக்கே''*

என்று பாட, அச்சிலை விழுந்து, அதன் பொன் கொண்டு, அரங்கன் திருப்பணியை குறையறச் செய்தார்.

அவ்வாறு திருமதிலைக் கட்டும்போது, தொண்டரடிப்பொடி ஆழ்வார் பெரிய பெருமாளின் திருமாலைக் கைங்கரியத்துக்காக ஏற்படுத்தின நந்தவனம் நேர்பட, அதைத் தவிர்த்து ஒதுங்கிருக்கும்படி திருமதில் கட்டினார். அதனை அறிந்து அகமகிழ்ந்த தொண்டரடிப் பொடியாழ்வார், தாம் மலர்களைக் கொய்யும் ஆயுதத்திற்கு திருமங்கையாழ்வாரின் திருப்பெயர்களுள் ஒன்றாகிய ''அருள்மாரி'' என்னும் திருப்பெயரையிட்டு கொண்டாடினார்.

திருவரங்கனின் அநுமதியோடு திருக்குருகூரில் இருக்கும் நம்மாழ்வாரின் அர்ச்சாரூபமான மூர்த்தியைத் திருவரங்கத்திற்கு எழுந்தருளச் செய்து, மார்கழி மாதத்தில், வேதங்களுக்கு இணையாக நம்மாழ்வார் முதல் எல்லா ஆழ்வார்களின் ப்ரபந்தங்களை அரங்கனின் முன்பாக இசைத்து ''அத்யயன'' உத்ஸவம் என்பதனை திருவிழாவாக நடத்தினார்.

இதனால், கலி காலத்தின் கொடுமையை அடியார்க்கடிமையால் ஒழித்தவர் என்பதால், பரகாலர் '*கலிகன்றி*' என்னும் திருப்பெயர் பெற்றார். இங்ஙனம் 105 ஆண்டுகள், இப்பூவுலகில் வாழ்ந்த திருங்கையாழ்வார், இறுதியாக திருக்குறுங்குடி சென்று நம்பியைச் சிலகாலம் தொழுது குமுதவல்லியாருடன் நலமந்தம் இல்லாதோர் நாடெய்தினார்.

*கலந்த திருக்கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே*
*காசினியிற் குறையலூர்க்காவலோன் வாழியே*
*நலந்திகழாயிரத்தெண்பத்துநாலுரைத்தான் வாழியே*
*நாலைந்துமாறைந்தும் நமக்குரைத்தான் வாழியே*
*இலங்கெழு கூற்றிருக்கையிருமடலீந்தான் வாழியே*
*இம்முன்றிலிருநூற்றிருபத்தேழீந்தான் வாழியே*
*வலந்திகழுங் குமுதவல்லி மணவாளன் வாழியே*
*வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே.*

---

**அறிவிப்பு :** 'மதுரமுரளி', ஜுன் '97 இதழுடன் இரண்டு வருஷம் பூர்த்தியாகவுள்ளது. சந்தாதாரர்கள் மூன்றாம் வருஷத்திற்கான சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வருஷ சந்தாவிற்கான டிமாண்டு டிராப்டை '*குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்*' என்ற பெயரில் வாங்கி, உறை மீது

மதுரமுரளி,
V. சங்கரன்,
5/3, MIG Flats,
பி.டி. ராஜன் ரோடு,
கே.கே. நகர்,
சென்னை - 600 078.
தொலை பேசி எண் : 4840527

என்ற விலாசத்திற்கு அனுப்பவும். மணியார்டர் மூலமும் அனுப்பலாம். மிஷன் சார்பில் **"சாந்தீபனி குருகுலம்"** என்ற டிரஸ்டின் கீழ் சாமவேத பாடசாலையும், யஜுர்வேத பாடசாலையும் சென்னை வளசரவாக்கத்தில் நடைபெறுகின்றன. பாடசாலைக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு.

பாடசாலைக்கு வித்யார்த்திகளையும், 'மதுரமுரளி' இதழுக்கு சந்தாதாரர்களைச் சேர்த்தும், விளம்பரங்களை அனுப்பி வைத்தும் உதவக் கேட்டுக் கொள்கிறோம்.

# வேத கதைகள் - 1

*தேவாவை ஹவிர்ப்ருத்வா அப்ருவந்*
*அஸ்மிந்நிதம் த்ரக்ஷ்யாமஹே இதி*

ஒரு சமயம், தேவர்கள் யாகம் செய்தனர். அதில் புரோடாஸம் இடுவதற்காக உரலில் நெல்லைக் குத்தி, அரிசியை அரைத்து, பாத்திரத்தில் வறுத்து, கொதிக்கும் கல்லில் வைத்தனர்.

அரிசி மாவை வறுத்து, அதில் ஜலம் விட்டு, குதிரைக் குளம்பு அளவு ஆமை உருவம் போல் செய்தால் அது புரோடாஸம் எனப்படும். நெல், அரிசி இவைகளும் நம்மைப் போன்ற ஒரு ஜீவன் தான். உரலில் குத்துவது ஜீவஹிம்சை தான். இதனால் பாபம் ஏற்படுகிறது. இந்த பாபத்தை நாம் எவ்விதம் தொலைப்போம் என்று தேவர்கள் ஆலோசனை செய்தனர். அப்போழுது அக்னி பகவான், ''ஓ தேவர்களே! உங்கள் சக்திகளை என்னிடம் செலுத்துங்கள். அந்த சக்தியின் பலத்தால், நான் சிலரை உண்டு பண்ணுகிறேன். அவர்களிடம் உங்கள் பாபத்தை போக்குங்கள் என்று கூறினார். தேவர்கள், அக்னியின் சொல்லைக் கேட்டு, சக்தியுள்ள தன் உடல்களை அக்னியினிடத்தில் சமர்ப்பித்தனர்.

இவ்விதம், முப்பத்து முக்கோடி தேவர்களின் உடல்கள் அக்னியினிடத்தில் இருப்பதால், அக்னி ஸர்வ தேவதா ஸ்வரூபமாக விளங்குகிறார். எல்லா தெய்வங்களுக்கும் அக்னியில் ஹோமம் செய்யப்படுகிறது. இவ்விதம் எல்லா தேவர்களின் உடல்களைத் தாங்கிய அக்னியானவர், தன்னிடமிருந்து ஒரு நெருப்புத் துண்டை எடுத்து ஜலத்தில் ஓங்கி அடித்தார். அதிலிருந்து ''ஏகதர்'' என்பவர் உண்டானார்.

இவ்விதம் இரண்டாவது தடவையும் தணலை ஜலத்தில் அடித்ததில் ''த்விதர்'' என்பவர் உண்டானார். மூன்றாவது முறையாக செய்ததில் ''த்ரிதர்'' என்பவர் உண்டானார். ஜலத்திலிருந்து உண்டானதால் இவர்களுக்கு ''*ஆப்யர்கள்*'' என்ற பெயர் உண்டானது.

தேவதைகள் ஆத்மாவிலிருந்து தோன்றியதால் ''*ஆத்ம்யர்கள்*'' என்றும் பெயர் பெற்றனர். தேவர்கள் தாங்கள் செய்த பாபங்களை இந்த ''ஆப்யர்''களிடத்தில் போக்கினர். வஸ்த்திரத்தை ஜலத்தில் அலசி எடுத்தால் வஸ்த்ரத்தில் உள்ள அழுக்கு அதனை விட்டு ஜலத்தைப் பற்றிக் கொள்கிறது. இவ்விதம் பாபமும் பிறரை அடைந்து நம்மை விட்டு

நீங்குகிறது. இவ்விதமாக தேவர்கள் செய்த பாபங்கள், ஆப்யர்களில் ''ஏகதரை'' அடைந்தன. அவர்கள், தேவர்கள் செய்த பாபத்தைப் பெற்று, சூரியன் உதிக்கும் பொழுது எவன் தூங்குகிறானோ அவனிடத்தில் தன் பாபத்தைப் போக்கி தூய்மைப் பெற்றனர்.

சூரியன் உதிக்கும் பொழுது தூங்குபவன், தனக்கு ஏற்பட்ட பாபத்தை சூரியன் அஸ்தமிக்கும் பொழுது தூங்குபவனிடத்தில் போக்கினான். அவன் தன் பாபத்தை சொத்தை நகம் உள்ளவனிடமும் அவன் தன் பாபத்தை பல் வியாதி உள்ளவனிடத்திலும் போக்கினார்கள்.

மூத்தவளுக்கு விவாஹம் ஆகாமல் இருக்கும் பொழுது தங்கையை மணந்தவனுக்கு ''அக்ரதிதிஷு'' என்று பெயர். சொத்தைப் பல் உள்ளவன் தன் பாபத்தை இந்த அக்ரதிதிஷுவினிடத்தில் போக்கினான்.

தம்பிக்கு விவாஹமாகி, விவாஹம் ஆகாத அண்ணன் ''பரிவித்தன்'' என்றழைக்கப்படுவான். அக்ரதிதிஷு தன் பாபத்தை பரிவித்தனிடத்தில் போக்கினான். பரிவித்தன், தன் பாபத்தை வீரனான க்ஷத்ரியனைக் கொன்றவனிடத்தில் போக்கினான். அவன் தன் பாபத்தை ''ப்ரஹ்மஹத்தி'' செய்தவனிடத்தில் போக்கினான். பாபங்கள் முடிவு பெறும் இடம் ப்ரஹ்மஹத்தி தான். பாபமானது ப்ரஹ்மஹத்தி செய்தவனைத் தாண்டி வேறு யாரிடமும் செல்ல முடியவில்லை. ஆதலால் தான் ப்ரஹ்மஹத்திக்கு மேற்பட்ட பாபம் கிடையாது. அஸ்வமேதத்திற்கு மேல் உயர்ந்த புண்ணியம் கிடையாது.

*''ப்ரஹ்மஹத்யா அஶ்வமேதாப்யாம்*
*ந வரம் புண்ய பாபயோ:''*

என்று ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டுள்ளது.

கர்மவிபாகம் என்ற நூலில் சொத்தை நகம், சொத்தைப் பல் இந்த வியாதிகள் முன் ஜன்மாவில் நாம் செய்த ஒரு வித பாபங்களினால் தான் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. இந்த காரணத்தினால் தான், நாம் எந்த ஜன்மத்திலோ செய்த பாபங்கள் இப்பிறவியிலும் நம்மைப் பற்றுகின்றன.

வேதத்தில் கூறப்பட்டுள்ள இந்த சிறு கதையால் முன் கூறிய பாபங்களை நாம் செய்யாமல் இருந்து பெருமானின் பேரருளைப் பெறவேண்டும்.

# ஸ்ரீ குருஜியிடம், பக்தர்கள் அவ்வப்பொழுது கேட்ட கேள்விகளும், அதற்கு ஸ்ரீ குருஜி அளித்த பதில்களும்

*கேள்வி : ஒரு விபத்தைப் பார்த்ததிலிருந்து என் மனம் அதையே நினைத்துக் கொண்டிருக்கிறது; இதற்கு காரணம் என்ன?*

ஸ்ரீ குருஜி : தியானம் செய்து வருபவர்கள், வீதிகளில் செல்லும் பொழுது, நடக்கும் விபத்துகளையோ பக்கத்தில் கிடக்கும் சவங்களையோ ஊர்ந்து கவனிக்காமல் இருக்க வேண்டும். ஏன் என்றால், நாம் தியானத்தில் உட்கார்ந்த பிறகும் மனம் அந்த காட்சியை நினைத்துக் கொண்டேயிருக்கும். அதனால், தியானத்திற்கு தடை ஏற்படும்.

*கேள்வி : என்னால் வெகு நேரம் தியானத்தில் உட்கார முடியவில்லை. என்ன செய்வது?*

பதில் : ஆரம்பத்தில், தியானத்தில் உட்காருவது சிரமமாகத்தான் இருக்கும். கொஞ்சம் பொறுமையுடன் பொறுத்துக் கொள்ள பழகிக் கொண்டு விடுவோமானால் போகப் போக சரியாகி விடும்.

*கேள்வி : பக்தியின் பெருமை என்ன?*

பதில் : என்னால் யோகமோ, தியானமோ, விசாரமோ, கர்மங்களோ செய்ய முடியவில்லை என்று சொன்னால் அதில் நியாயம் உள்ளது. ஆனால் பக்தி செய்ய முடியவில்லை என்று சொல்பவர்களே இருக்க முடியாது. ஒரே நாமத்தை இடைவிடாமல் ஜபம் செய்து வந்தாலே, ஸுலபத்தில் ஸித்தி ஏற்படும். இதுதான் பக்தியின் உயர்வு.

*கேள்வி : காசி, அயோத்தி, ப்ருந்தாவனம் போன்ற இடங்களில் ஸாதனைகள் புரிவதால் விசேஷ பலன்கள் ஏற்படும் என்பது உண்மையா?*

பதில் : இது உண்மைதான். நமக்கு அல்ப பக்தி இருந்தால் கூட மேற்படி சொன்ன க்ஷேத்திரங்களில், ஸ்வப்னத்திலாவது பகவத் தரிசனம் ஏற்படும்.

*கேள்வி : குரு பக்தியே போதுமானதா? அதனால் கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்துவிடுமா?*

பதில் : குரு பக்தி ஒன்றே போதுமானது. அது பரிபூரணமான சரணாகதியுடன் கூடியதாக இருக்க வேண்டும். பரிபூரணமான சரணுகதி

செய்யும் மனோ பக்குவம் அவ்வளவு சுலபத்தில் வராது. எந்த அளவிற்கு நாம் குருவிடம் சரணாகதி செய்கிறோமோ அந்த அளவிற்கு சௌக்யம் ஏற்படும்.

பரிபூரணமான சரணாகதி பண்ணினவனுடைய பாதை, ம்ருதுளமான புஷ்பங்கள் நிறைந்தது போன்றதாகும். அல்ப சரணாகதி பண்ணினவனுடைய பாதை புஷ்பங்களும் முற்களும் கூடி நிறைந்ததாக இருக்கும். த்ருடமான குரு பக்தியே ஒருவனை சௌக்யமாக நடத்திச் செல்லும்.

*கேள்வி: சரணாகதி என்பது ஒரு செயலா?*

பதில் : சரணாகதி என்பது ஒரு செயல் கிடையாது. அது மனப்பூர்வமாக நம்மை ஒப்புவிப்பதே ஆகும்.

*கேள்வி : நாம் சரணாகதி செய்த குருநாதர், ஒருக்கால் ஞானியாக இல்லாவிடில் நம் கதி என்ன?*

பதில் : த்ருட விச்'வாசத்துடன் நாம் சரணாகதி செய்தால் நம் சரணாகதி நிச்சயம் பலித்து விடும்.

*கேள்வி : ஒரு ஞானியிடம் செய்து கொண்ட சரணாகதிக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?*

பதில் : ஒருவன் எப்பேற்பட்ட குறைகள் உள்ளவனாக இருந்தாலும், ஒரு ஞானி அவனுடைய சரணாகதியை ஏற்றுக் கொண்டு விட்டாரேயானால், அதன் விசேஷ பலத்தினாலேயே அன்று முதல் இவன் வாழ்க்கை ஆச்சரியமாக மாறி விடும்.

*கேள்வி : எல்லோருக்கும் ஒரே விதமான உபதேசம் பொருந்துமா?*

பதில் : நிச்சயமாக பொருந்தாது. மஹாத்மாக்கள், யார் மிகவும் கோழையாக இருக்கிறானோ அவனைப் பார்த்து தைரியமாக இருக்க வேண்டும் என்று உபதேசிப்பார்கள். யார் அதீதமான தைரியத்துடன் துஷ்டத்தனங்கள் செய்து வருகின்றானோ அவனைப் பார்த்து சாந்தமாக இருக்க வேண்டும் என்று உபதேசிப்பார், யாருக்கு Intellect அதிகமாக உள்ளதோ அவர்களுக்கு வேதாந்த மார்க்கத்தை உபதேசிப்பார்கள். யாருக்கு த்ருட விச்'வாசம் ஸ்வபாவமாக உள்ளதோ, அவர்களுக்கு பக்தி மார்க்கத்தை உபதேசிப்பார்கள். ஆகவே, அவர் அவர்களின் தகுதிக்கு தகுந்தபடி தான் உபதேசம் செய்ய வேண்டும்.

*கேள்வி : க்ருஷ்ண தரிசனம் மிகவும் கடினம் என்கிறார்களே?*

பதில் : பூரணமான ப்ரஹ்ம ஸ்வரூபமாக ஸ்ரீ க்ருஷ்ணன் இருப்பதால், நமக்கு சிறிதளவு மாயை இருக்குமேயானால் கூட, ஸ்ரீ க்ருஷ்ண தர்சனம் என்பது ஏற்படாது. ஆகவே, பூர்ணமாக அக்ஞானம் நாசமானவர்களுக்கே ஸ்ரீ க்ருஷ்ண தர்சனம் ஏற்படும்.

*கேள்வி : மோக்ஷம் அடையவேண்டும் என்ற ஆசை யாரோ சிலருக்குத் தான் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் என்ன?*

பதில் : ஒருவன், ஸம்ஸாரத்தில் பலவிதமான துக்கங்களை அனுபவிக்கிறான். அப்படியும் அவனுக்கு ஈஸ்வரனை அடைய வேண்டும் என்கிற ஆசை உண்டாகாது. ஒருவன் பெரிய தனவந்தனாக எல்லா விதமான வசதிகளுடன் இருப்பான். அவனுக்கு, எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஈஸ்வரனை அடைய வேண்டும் என்ற ஞானம் வந்துவிடும். ஒருவன் வயோதிகனாக இருந்தும் அவனுக்கு பகவானை அடைய வேண்டும் என்று தோன்றாது. குழந்தையாக இருக்கும் ஒரு சிலருக்கு ஆச்சரியமாக மோக்ஷத்தில் ஆசை உண்டாகி விடுகின்றது.

ஆகவே, மோக்ஷத்திற்கு போகவேண்டும் என்ற ஆசை ஏற்படுவதற்கு, பல கோடி ஜன்மாக்களில் செய்த புண்ணியமே காரணமாகும்.

*கேள்வி : சிலர், வயதான காலத்தில் பக்தி பண்ணலாம் என்று கூறுகிறார்களே?*

பதில் : வயதான காலத்தில் சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று யாரும் இருப்பதில்லையே. ஆகவே இதெல்லாம் வீண் பேச்சு.

---

முன் அட்டைப் படம் : காசி க்ஷேத்ரத்தில் ஸ்ரீ குருஜி.

பின் அட்டைப் படம் : பெங்களூரில், ஸமீபத்தில் நடந்த 'வேத ஸம்மேளனத்தில்', வேத வித்வான்களுடன் ஸ்ரீ குருஜி.

# ஸ்ரீ க்ருஷ்ணன், தன் பக்தர்களை கை விடுவதில்லை

- பாலாஜி

ஸ்ரீமத் பாகவதம் மோக்ஷ க்ரந்தமாகும். இது, பாகவத மஹாத்மியத்திலிருந்து ப்ரஸித்தமாகிறது. ஸ்ரீமத் பாகவதத்தில் மொத்தம் பன்னிரண்டு ஸ்கந்தங்களும், 200 அத்தியாயங்களும் உள்ளன. இப்பன்னிரண்டு ஸ்கந்தங்களும் பகவானுடைய பன்னிரண்டு நாமங்களைப் போல் மிகவும் ப்ரஸித்தமானவைகளாகும். ஸ்ரீமத் பாகவதத்தின் மஹாத்மியத்தை பரிக்ஷிக்க விரும்பிய ப்ரஹ்மா, ஒரு சமயம் அனைத்து ரிஷிகளும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, ஒரு தராசில் பாகவதத்தையும், மற்றொரு தட்டில் இதர மோக்ஷ ஸாதனங்களையும் இட்டு நிறுத்திப் பார்க்கும் பொழுது, ஸ்ரீமத் பாகவதம் இருந்த தட்டு கனமாகி கீழே தங்கியிருந்ததைக் கண்டு மிகவும் ஆச்சரியம் அடைந்தார். இவ்வாறு, இதன் பெருமை மஹரிஷி முன்னிலையில் வெளிப்பட்டது.

ஶௌனக மஹரிஷி, ஸூத பௌராணிகரைப் பார்த்து ''எந்த விஷயங்கள் மனிதனுடைய மனதை சுத்தமாக்குகின்றதோ அப்படிப்பட்ட விஷயங்களுக்கும் சுத்தத்தை தரக்கூடிய ஸாதனம் எது?'' என்று கேட்டார். அதற்கு ஸூதர் அவருக்கு, 'ஸ்ரீமத் பாகவத ஶ்ரவணம்' என்னும் உத்தமமான சாதனத்தைச் சொன்னார். இந்த பரம பாவனமான க்ரந்தத்தின் மஹாத்மியத்தைச் சொல்கிறது பத்ம புராணம். புராணங்களை ஶ்ரவணம் செய்வதே புண்ணியம். புண்ணியம் வாய்ந்த இந்த ப்ரஸித்தமான பத்ம புராணமே பாகவதத்தை மிக உயர்வாகச் சொல்கிறது என்றால் ஸ்ரீமத் பாகவதம் 'பாவனானாஞ்ச பாவனம்' என்பது தீர்மானமாக தெரிகிறது.

ஸ்ரீமத் பாகவத மஹா க்ரந்தத்தை இயற்றியவர் ஸ்ரீ வ்யாஸ பகவான். ''மஹர்ஷே: கீர்த்தனாத்தஸ்ய பீஷ்ம: ப்ராஞ்ஜலி: அப்ரவீத்'' என்கிறபடி, வ்யாஸரைப் பற்றி பேச ஆரம்பித்தவுடன், பீஷ்மர் தன் சிரஸின் மேல் கைகூப்பியபடி பேசுவாராம். இவ்வாறு தர்ம ச்ரேஷ்டர்களால் கொண்டாடப்படும் ஸ்ரீ வ்யாஸர், ப்ரஹ்ம சூத்ரம், மஹாபாரதம் போன்ற ப்ரஸித்திமான விஷயங்களை செய்திருந்தாலும், நிம்மதி இல்லாமல் ஏதோ குறையுடன் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, நாரதர், வ்யாஸர் ஸமீபத்தில் சென்று, ஸ்ரீமத் பாகவதத்தை எழுதும்படி சொன்னார்.

மஹாபாரதம் தர்மத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிறது. அதில், ஒவ்வொரு அத்தியாயங்களிலிருந்தும் தர்மத்தைப் பற்றிய விஷயங்கள் வரும். இடையிடையே பகவத் விஷயங்கள் வந்தாலும், தர்மத்திற்குத் தான் ப்ராதான்யம் கொடுக்கப்பட்டுள்ளது. மஹான்கள், தர்ம விசாரம் என்னும் ஸாமான்ய தர்மத்திற்கு முக்கியத்துவம் தராமல், விசேஷ தர்மத்திற்குத்தான் ப்ராதான்யம் கொடுப்பார்கள். பாகவத தர்மம் என்பது விசேஷ தர்மமாகும். இதில், அனைத்து ஸாமான்ய தர்மங்களும் அடங்கி விடுகின்றன. ஸாமான்ய தர்மமான யாக, யக்ஞாதிகளின் பலன் சித்த சுத்தி தான். சித்த சுத்தியின் பலன், பகவானிடம் ப்ரேம பக்தியைப் பெறுவது. அதனால், ஸர்வ தர்மங்களின் பலன் ஸ்ரீமத் பாகவத ச்ரவண மாகும். இதையே ஸூதர், ''ஜன்மான்தரே பவேத் புண்யம் ததா பாகவதம் லபேத்''; ஜன்மாந்திர புண்ணியத்தினால் தான், ஸ்ரீமத் பாகவதம் கேட்கும் பாக்கியம் கிடைக்கும் என்று தீர்மானமாகச் சொல்கிறார்.

வேதத்தைத் தொகுத்து முறைப்படுத்தினதால் வ்யாஸர், வேத வ்யாஸர் என்று புகழப்படுகிறார். அந்த வ்யாஸரே ஸ்ரீமத் பாகவதத்தினால் தான் மனசாந்தி அடைந்தார் என்பதை சொல்ல வரும் ஸ்ரீவல்லபாச்சாரியார், ''பாகவதத்தைத் தவிர வேறு எதனாலும் சாந்தி கிடைக்காது என்பது தாத்பர்யம்'' என்று சொல்கிறார். பாகவதம் பகவத் குணத்திற்காகவே எழுதப்பட்டது. பக்தர்களின் சரித்திரம் இல்லாமல், பகவத் குணத்தை அனுபவிக்க முடியாது. ஸ்ரீமத் பாகவதமோ பக்த சரித்திரங்கள் நிறைந்த க்ரந்தமாகவே இருக்கிறது.

ஒரு காவியம் எழுதுவது என்றால், காவியத்தை எழுதுபவர் மஹாவித்வானாக இருக்க வேண்டும். காவிய நாயகன், சிறந்த நாயகனாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த காவியம் ப்ரஸித்தமாகும். ஸ்ரீமத் பாகவதத்தை எழுதியவர் வேத வ்யாஸர். அதில் உள்ள விஷயங்களோ பகவத் குணங்கள். அவை மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை தரக்கூடியது. இவ்வாறாக, ஸ்ரீமத் பாவதம் சிறந்த காவியமாக விளங்குகிறது.

புராணம் என்றால் த்வீபங்களின் வர்ணனை, கால அளவுகள் போன்றவை இருக்க வேண்டும் என்ற நியமத்திற்கேற்ப பாகவதத்திலும் அவை இருக்கின்றன. ஆனாலும், பக்த சரித்திரங்களும், பகவத் குணமும் தான் ப்ரதான்யமாக இதில் இருக்கிறது.

ஸ்ரீமத் பாகவதத்தைப் பற்றிய ஒரு விசேஷ விஷயம். நாரதர், யமுனைக் கரையில் யுவதியின் ரூபத்தில் பக்தியைப் பார்க்கிறார். அவள் அருகில் ஞானமும், வைராக்கியமும் வயோதிகர்களாக நினைவிழந்து கிடப்பதையும் பார்த்தார். நாரதர், அவர்கள் இருவரின் காதிலும்

உபநிஷத், கீதை போன்ற வேதாந்த வாக்கியங்களைச் சொல்லியும், அவர்கள் எழுந்திராமல் நினைவிழந்தவர்களாகவே இருந்தனர். நாரதர், ஸனகாதிகள் மூலமாக ஸ்ரீமத் பாகவத மஹாத்மியத்தைத் தெரிந்து கொண்டு, பாகவத சப்தாஹ யக்ஞம் நடத்தினார். அவர்கள் இருவரும் இளமை திரும்பி ஆனந்த தாண்டவமாடினர். இவ்வாறு பத்ம புராணத்தில் வருகிறது. ஸ்ரீமத் பாகவதம் பகவத் பக்தியையும், உபநிஷத், கீதை போன்ற க்ரந்தங்கள் தரும் ஞான, வைராக்யத்தைக் காட்டிலும் மேலானதை தரக்கூடியதாக விளங்குகிறது. இது பாகவதத்தின் பெருமையாகும்.

ஸ்ரீமத் பாகவதத்தைப் ப்ரகாசப்படுத்தினவர் ஸ்ரீ ஶுகர். ஸ்ரீ வ்யாஸ பகவான் பாகவதத்தை எழுதிய பிறகு, அதைச் சொல்வதற்கு ஏற்ற தகுந்த அதிகாரியை எதிர்ப்பார்த்து இருக்கும் பொழுது, ஸஹஜ ஸ்திதி ஸமாதி நிஷ்டரான ஸ்ரீ ஶுகர் பாகவதத்திலிருந்து ஒரு ஶ்லோகத்தைக் கேட்டு, ஸ்ரீ வ்யாஸரிடமிருந்து முழு பாகவதத்தையும் அறிந்து கொண்டார். பிறகு ஶுகர், ஒரு தகுந்த பக்தனை எதிர்பார்த்து க்ரந்தத்தை வெளியிடாமலேயே இருந்தார். இங்ஙனம் இருக்கையில், சரியான பாத்திரமாக பரிக்ஷித் அமைந்ததால் ஸ்ரீமத் பாகவதத்தை லோகத்தின் க்ஷேமம் பொருட்டு வெளியிட்டார்.

ஶ்ருங்கி என்ற ப்ராஹ்மண குமாரரின் சாபத்தினால் ஏழாவது நாளில் தக்ஷகன் என்ற ஸர்ப்பம் கடித்து தனக்கு மரணம் ஏற்படும் என்பதைத் தெரிந்து கொண்ட பரிக்ஷித், கங்கை கரையில் ப்ராயோபவேசம் அனுஷ்டிக்க, ஸகல ரிஷிகளும் அவனுடைய க்ஷேமத்திற்காக அங்கு வந்து தங்கினார்கள். பரிக்ஷித் ஒரு சாதுவின் மீது இறந்த பாம்பை தூக்கிப் போட்டதற்கு காரணம், எப்படி சாதுக்களைப் பார்த்தால் நன்மையும் நல்ல புத்தியும் நமக்கு ஏற்படுமோ அது மாதிரி அதீதமான துஷ்டர்களைப் பார்த்தால் கெடுதியும் துக்கமும் வந்துவிடும் என்பதனால்.

பரிக்ஷித், சிறிது காலத்திற்கு முன்புதான் கலியைப் பார்த்திருந்ததால், கலியினுடைய பாதிப்பு பரிக்ஷித்திற்கு, மிகவும் ஏற்பட்டு, புத்தி தடுமாறி அத்தகைய காரியத்தைச் செய்தான். ஆனால், பரிக்ஷித் ஸ்வபாவமாக நல்லவனாகவும் க்ருஷ்ண கதையில் பற்றுள்ள வனாகவும், க்ருஷ்ணனுடைய அனுக்ரஹத்தில் பிறந்தவனாகவும் இருந்ததால் ஸ்ரீ ஶுகர், அவனுக்கு ஸ்ரீமத் பாகவதத்தைச் சொன்னார். ஏழாவது நாளில் ஶுகர் சொல்லும் பொழுது, ''பரிக்ஷித், உன்னை தக்ஷகன் வந்து தீண்டுவான். அதனால் உன் சரீரம் எரிந்து விடும். ஆனால், சரீர ஆத்ம விவேகத்தினால் நீ மோக்ஷம் அடைவாய்.

அப்பொழுது, நான் இங்கு இருக்க மாட்டேன். ஏனெனில், ஸ்ரீமத் பாகவதம் கேட்ட இந்த சரீரம் அழிவதை பார்க்க நான் விரும்பவில்லை'' என்று சொல்லிச் சென்று விட்டார். அவ்வாறு பாகவத ஶ்ரவணம் செய்த பரிக்ஷித்தின் சரீரத்தைக் கூட உயர்ந்ததாக பார்த்தார் ஸ்ரீ ஶுகர்.

ஸ்ரீமத் பாகவதத்தை ஶ்ரவணம் செய்வது உயர்ந்ததாக சொல்லப்படுகிறது.

பாகவதம் என்றாலே ஶ்ரவணம் தான் ப்ராதான்யம். அதனால் தான் ஶுகர் கதை சொல்ல ஆரம்பிக்கும் பொழுது, 'ஶ்ராவயிஷ்யாமி'' (கேட்க வைக்கிறேன்) என்று சொல்கிறார். ஏழு நாட்கள் கதை சொன்ன ஸ்ரீ ஶுகர் மோக்ஷத்திற்கு போனாரா என்று தெரியவில்லை. ஆனால், அதை ஶ்ரவணம் செய்த பரிக்ஷித் மோக்ஷத்திற்கு போனார் என்பது அதி ப்ரஸித்தமாகும். ஆத்ம தேவரின் சரித்திரத்தில், ஸ்ரீமத் பாகவதம் சொன்ன கோகர்ணனைவிட, அதைக் கேட்ட துந்துகாரி மோக்ஷம் அடைந்தான் என்பது பாகவத மஹாத்மியத்திலிருந்து தெரிகிறது.

இதையே நாரதர் சொல்லும் பொழுது

*'ஶ்ரவணம் ஸர்வதர்மேப்யோ வரம் மன்யே தபோதனா: ।*
*வைகுண்டஸ்தோ யத: க்ருஷ்ண: ஶ்ரவணாத்யஸ்ய லப்யதே ॥*

என்று பத்ம புராணத்தில் உத்தர காண்டத்தில் சொல்கிறார். ஶ்ரவணத்தினாலேயே வைகுண்டத்திலுள்ள பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் நமக்கு கிடைக்கிறான் என்று கூறுகிறார்.

ஸ்ரீமத் பாகவதத்தை ஸ்ரீ ஶுகர், முதலில் விதுரர் மைத்ரேயர் ஸம்வாதமாக வராஹாவதாரம், ஶ்ருஷ்டி, தக்ஷ யஜ்ஞம், துருவ சரித்ரம் முதலிய பல கதைகளைக் கூறி பின்பு பஞ்சம ஸ்கந்தத்திலிருந்து தானே கதையை சொல்ல ஆரம்பிக்கின்றார். ஸ்ரீமத் பாகவதத்தில் ஒவ்வொரு ஸ்கந்தத்திலும் பக்த சரித்திரம் இருக்கிறது.

முதல் இரண்டு ஸ்கந்தங்களில் பாண்டவ வம்சம், மூன்றாவது ஸ்கந்தத்தில் தேவஹூதி, ப்ரஜாபதி, முதலியவர்களின் சரித்ரம், நான்காம் ஸ்கந்தத்தில் உத்தமமான துருவ சரித்ரம், மற்றும் பல சரித்ரங்கள், பஞ்சம ஸ்கந்தத்தில் ஜடபரதோபாக்யானம், ஆறாவதில் அஜாமிளோபாக்யானம், வ்ருத்தாஸுர சரிதம், ஏழாவது ஸ்கந்தம் முழுவதும் ப்ரஹ்லாத சரித்ரம், எட்டாவதில் கஜேந்திர மோக்ஷம், ஒன்பதாவதில் அம்பரீஷ சரித்ரம், 10, 11, 12வது ஸ்கந்தங்களில் முழுவதும் ஸ்ரீ க்ருஷ்ண சரித்ரம், க்ருஷ்ண பக்தர்களின் சரித்ரம் என்று பக்த மஹாத்மியங்கள் நிறைய வருகின்றன.

ஸ்ரீமத் பாகவதத்தின் தசம ஸ்கந்தத்திற்கு ஆஸ்ரயம் என்று பெயர். ஆஶ்ரயம் என்றால் அடைக்கலம் என்று அர்த்தம். மற்றும், பகவத்

அவதாரங்களின் மூலம் சித்தத்தில் பக்தியுண்டாகி, அதன் மூலம் தசம ஸ்கந்தத்தில் உள்ள ஸ்ரீ க்ருஷ்ண லீலைகள் சுலபமாக நமக்கு புரியும். ஸ்ரீமத் பாகவதத்தில் தசம ஸ்கந்தத்தை மட்டுமே பாராயணம் செய்து ஆத்மதேவர் மோக்ஷம் அடைந்தார் என்று கூறப்படுகிறது. தசம ஸ்கந்தம் முழுவதும் ஸ்ரீ க்ருஷ்ண சரித்ரம் தான். ஒன்பதாவது ஸ்கந்தத்தில் கடைசியில் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தை சுருக்கமாக ஸ்ரீ *ஶுகர்* பரிக்ஷித்திற்குச் சொன்னார்.

அதனால் பரிக்ஷித், *ஶுக*ரைப் பார்த்து, "எனக்கு சூரிய வம்சத்தையும் சந்திர வம்சத்தையும் மிகவும் விரிவாக சொன்னீர்கள். ஆனால், விரிவாக சொல்லவேண்டிய ஸ்ரீ க்ருஷ்ண கதையை மிகவும் குறைத்து விட்டீரே. இத்தனை நேரம் நான் பொறுமையாகக் கதைக் கேட்டதே ஸ்ரீ க்ருஷ்ண கதை சொல்வீர்கள் என்னும் ஆசையினால் தான். நான் க்ருஷ்ணன் காலத்தில் இருந்திருந்தால், ஸ்ரீ க்ருஷ்ணன் என்னை எடுத்து கொஞ்சியிருப்பான், மடியில் போட்டு விளையாடியிருப்பான். எனக்கு அப்படி ஒரு பாக்கியம் இல்லாததால் க்ருஷ்ணனின் சரித்திரத்தையாவது கேட்டு என்னுடைய தாபத்தை போக்கிக் கொள்கிறேன். ஸ்ரீ க்ருஷ்ண கதையில் எனக்கு உள்ள உரிமை வேறு யாருக்கு உண்டு? கர்ப்பவதியான என் தாய் அஸ்வத்தாமாவினுடைய அஸ்த்திரத்தினால் அடிபட்டு ஸ்ரீ க்ருஷ்ணனிடம் வேண்ட, க்ருஷ்ணன் என் தாயையும் கர்ப்பத்தில் இருந்த என்னையும் காப்பாற்றி அனுக்ரஹித்தான். அப்படி க்ருஷ்ணனின் அனுக்ரஹத்தின் மூலம் நான் பிறந்ததால் எனக்கு, ஸ்ரீ "விஷ்ணுராதன்" என்றே பெயரிட்டனர். அப்படிப்பட்ட எனக்கு ஸ்ரீ க்ருஷ்ண கதையை விஸ்தாரமாக சொல்லுங்கள்" என்று வேண்டினான். ஸ்ரீ *ஶுக*ரும் பரிக்ஷித்தைக் கொண்டாடி ஸ்ரீ க்ருஷ்ண கதையை மேலே சொல்ல ஆரம்பித்தார்.

இவ்வாறு பரிக்ஷித் கேட்டு *ஶுகர்* சொல்ல ஆரம்பிக்கும் பொழுது "***தம் அத்புதம் பாலகம்***" என்று ஆரம்பித்தார். தத் என்ற ஸப்தத்திற்கு பூர்வபராமர்*ஶுக*: என்று பெயர். இது முன் வாக்கியத்திலுள்ள பெயரை அனுசரித்து இரண்டாம் வாக்கியத்திற்கு அர்த்தத்தைக் கொடுக்கும். உதாரணமாக, "ராமன் காட்டிற்கு போனான். அவன் அங்கு பதினான்கு வருடம் தங்கினான்" என்ற இரண்டு வாக்கியங்களில், இரண்டாவது வாக்கியத்திலுள்ள "அவன்" என்ற சொல் ராமனைக் குறிக்கும். இவ்வாறு ஸ்ரீ *ஶுகர்* "எந்த அத்புதமான க்ருஷ்ணனுடைய சரித்ரத்தைக் கேட்டாயோ அந்த அத்புதமான பாலகன் "தம் அத்புதம் பாலகம்.." என்று ஆரம்பித்தார். இப்படி தசம ஸ்கந்தத்தினால்தான் பாகவதத்திற்கே பெருமை.

தசம ஸ்கந்தத்திலும் முதல் பாதி மிகவும் உத்தமமானது. முதல் பாதியில்தான் க்ருஷ்ணனுடைய வெண்ணெய் திருடும் லீலைகள், ப்ரஹ்மமோஹன லீலை, காளீய நர்த்தனம், கோவிந்த பட்டாபிஷேகம் ராஸ லீலை போன்ற பல லீலைகள் வருகின்றன. பிற்பாதியில் ஸ்ரீ க்ருஷ்ணனின் அவதார கார்யங்கள் வருகின்றன. ஆனால், பிற்பாதியைக் காட்டிலும் முற்பாதிக்குத்தான் மஹாத்மியம் அதிகம். எப்படி ராமன் 11 ஆயிரம் வருடங்கள் ஆட்சி புரிந்தாலும், 14 வருடங்கள்தான் முக்கியமான ராமாயணமாக ஆகிறதோ, அதே போல், க்ருஷ்ணனுடைய 125 வருட காலத்திலும் கோகுல ப்ருந்தாவனத்தில் தங்கிய 10 வருடங்கள்தான் அதி ப்ரஸித்தம். இந்த காலத்தில் தான் ஸ்ரீ க்ருஷ்ணனிடத்தில் கோப கோபிகைகளின் நிஷ்காம்யமான பக்தி வெளிப்படுகிறது. ராஸ லீலை என்னும் அப்ராக்ருதமான லீலையும் இந்தப்பகுதியில் தான் வருகிறது. க்ருஷ்ணனுடைய லீலைகளை சாதாரண மனித புத்தியை கொண்டு புரிந்து கொள்ள இயலாது. அதனால், பகவான் ராஸ லீலை பண்ணலாமா கூடாதா என்ற கேள்வியே பக்தர்களிடம் வரக்கூடாது; அது பகவானைப்பற்றி அறியாதவர்களின் விவாதம்.

பிறகு, உத்தமமான ப்ருந்தாவனத்தை விட்டு க்ருஷ்ணன் தன்னுடைய அவதாரக் கார்யங்களை கவனிப்பதற்காக மதுரா சென்றான். மதுராவில் க்ருஷ்ணனுக்கு, உற்ற தோழனாகவும், மந்திரியாகவும் ''உத்தவன்'' என்னும் வ்ருஷ்ணி வம்ஸத்தவன் இருந்தான். உத்தவனின் புத்தி சாதுர்யத்தைப் பார்த்து தேவகுருவான ப்ருஹஸ்பதியே தன்னுடைய சிஷ்யனாக ஆக்கிக்கொண்டாராம். அப்படி சிறந்த புத்திமானான உத்தவன், சிறு வயதிலிருந்தே க்ருஷ்ண பக்தியில் நாட்டமுடையவனாக இருந்ததால், க்ருஷ்ணன் மதுரையில் ஆட்சி புரிய ஆரம்பித்தவுடன் தானும் அவன் பக்கத்தில் போய் சேர்ந்து கொண்டான். எந்த வித்தையும் பகவானுக்கு அர்ப்பணமாகும் பொழுதுதான் உயர்ந்ததாக ஆகிறது. உத்தவனும் தன்னுடைய சிறந்த புத்தியை ஸ்ரீ க்ருஷ்ண பாதார விந்தங்களில் அர்ப்பணித்து க்ருஷ்ணனுக்கு மந்திரியாக, க்ருஷ்ணனுடைய அருகாமையிலேயே இருந்து வந்தான். க்ருஷ்ணனும் தன்னுடைய பீதாம்பரம், தான் அணிந்த மாலை, சந்தனங்கள் முதலியவற்றைக் கொடுத்து உத்தவனை விட்டு விலகாமல் அவனிடமே இருந்து வந்தான். க்ருஷ்ணன் அவதார கால முடிவில், தனக்கு மிகவும் பிடித்தது உத்தவன் என்று கூறுமளவுக்கு, உத்தவன், ஸ்ரீ க்ருஷ்ண பக்தி செய்து வந்தான்.

உத்தவன் ஒரு சமயம் ஏகாந்தமாக ஸ்ரீ க்ருஷ்ண த்யானத்தில் இருக்கும் பொழுது, பகவான் அவனுக்கு ப்ரேம பக்தியை கொடுக்க

விரும்பியும், தன்னைப் பிரிந்திருக்கும் கோபிகைகளுக்கு ஆறுதல் தருவதற்காகவும் உத்தவனைப் பார்த்து ''ஹே உத்தவா! நீ கோகுலத்திற்குச் செல். அங்கு என்னுடைய தாய் தந்தையர் என்னைப் பிரிந்து வருந்துகிறார்கள். அவர்களுக்கு ப்ரீதியைக் கொடுப்பதான என்னுடைய வார்த்தையைச் சொல். அங்கு கோபிகைகள், என் பொருட்டு பதி, புத்ரன் முதலானவர்களை விட்டவர்களாக, நான் திரும்ப வருகிறேன் என்று நான் சொன்ன வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, உயிரை கஷ்டப்பட்டு தரித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள், தங்களுடைய ஆத்மாவை என்னிடத்தில் அர்ப்பணம் செய்து விட்டதால் அவர்களைக் காப்பாற்ற வேண்டியவனாக இருக்கிறேன் நான். அதனால், அவர்களுக்கும் என்னுடைய ஸந்தேசத்தைச் சொல்'' என்று கூறியவுடன் உத்தவனும் க்ருஷ்ணனுடைய ப்ரீதிக்காக ப்ருந்தாவனம் சென்றான்.

முன்னம் கூறியபடி பகவானிடத்தில் பக்தி செய்துவிட்டால் ஞான வைராக்யங்கள் எல்லாம் தானே வந்துவிடும் என்பது நந்தகோபர் யசோதையையும், கோபிகைகளையும் பார்த்தால் நன்றாக புரியும். உத்தவன் ப்ருந்தாவனத்திற்குச் சென்றவுடன் நந்தகோபனும் யசோதையும் அவனை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். அவர்கள் உத்தவனிடம் ஸ்ரீ க்ருஷ்ணனைப் பற்றி விசாரித்தனர்; க்ருஷ்ணனைப் பற்றியே பேசினர். தங்களை பல விதமான துன்பத்திலிருந்து க்ருஷ்ணன் காப்பாற்றியதையும், வீர்ய பராக்ரமங்களை விளையாட்டாக செய்ததையும் அப்படிச் செய்யும் பொழுது அவன் பார்க்கும் கடைக் கண்பார்வையும் அவனுடைய மந்தஹாஸமும், அதற்கேற்றார் போல் அவன் பேசுகிற பேச்சையும் நினைத்து கண்ணீர் வடித்த வண்ணம் உத்தவனிடம் பேசினர். இத்தகையதொரு நிலையைக் கண்டு ஸ்தம்பித்துப்போன உத்தவன், அவர்களுடைய அலௌகிகமான பக்தியைப் பார்த்து மிகவும் ஆச்சர்யத்தை அடைந்தான். அவர்களைப் பார்த்து

*''அஹோ யூயம் பூர்ணார்த்தா: பவத்யோ லோக பூஜிதா: ।*
*வாஸுதேவே பகவதி யாஸாம் இத்யர்பிதம் மன: ॥*

தானத்தாலும், வ்ரதத்தினாலும், யஜ்ஞங்களினாலும் க்ருஷ்ண பக்தியானது அடையப்படுகிறது. அப்படிப்பட்ட பூர்ண பக்தியை உடைய நீங்களே பூர்ணர்கள்'' என்று கூறி அவர்களுக்கு உபதேசம் அவசியம் இல்லாவிட்டாலும் க்ருஷ்ணனின் பொருட்டு அவர்களுக்கு வேதாந்த வாக்கியங்களின் மூலம் க்ருஷ்ணனின் மஹாத்மியத்தைக் கூறி தேற்றினான்.

(அடுத்த இதழில் முடியும்)

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து- 20

(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அருணாசல அக்ஷர மண மாலை - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து சில பகுதிகள் - (தொடர்ச்சி)

*ஏனிந்த வுறக்கம் எனைப்பிறரிழுக்க*
*இதுவுனக்கழகோ அருணாசலா* *10*

வெளி விஷயங்களினால் நம் இந்திரியங்கள் இழுக்கப்பட்டு நாம் அவற்றில் மயங்குகிறோம். நாம், அவற்றில் மயங்க விரும்பாவிட்டாலும் கூட மயங்குகிறோம். காரணம், சுபாவமாக நம் மனம் அவற்றில் செல்வதே. நாம், நம் மனதைப் பார்த்து, இந்த விஷயங்களில் மயங்காதே என்று கட்டளையிட்டாலும் அது கேட்பதாக இல்லை. ஏனென்றால், மனது ஒருக்காலும் கட்டளைக்கு அடி பணியாது. அது பழக்கத்திற்கு மட்டுமே அடி பணிவதாகவுள்ளது.

மதுபானம் பண்ணும் ஒருவன் நாளடைவில் அதற்கு பழக்கமாகி விடுகிறான். இதனால், அவன் உடம்பு கெடுகிறது. சமூகமும் அவனை கேலி செய்கிறது. பிறகு வருத்தப்படும் அவன், இந்த பழக்கத்தினை எப்படியாவது விட்டுவிட நினைக்கிறான். தன் வீட்டில் இருப்பவர்களிடம் சத்தியமும் செய்து கொடுக்கிறான், ''நாளை முதல் குடிப்பதில்லை'' என்று. இரண்டு மூன்று நாட்கள் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாலும், பிறகு தானாகவே மதுபானம் செய்யத் துவங்கி விடுகிறான். வாஸ்தவத்தில் அவன், தான் திருந்த வேண்டும் என்று நினைத்தாலும் அவன் இந்திரியங்கள் அவனை இழுத்துக் கொண்டு போய் விடுகிறது. இதற்குக் காரணம், இத்தனை நாள் அந்த பழக்கத்திற்கு அவன் அடிமையானதே. நாம், நம் மனதைப் பார்த்து, காம க்ரோதங்களை விட்டு விடு, அகந்தையை விட்டு விடு என்று சொன்னால் அது கேட்காது. ஆனால், அதனை சத்சங்கத்திற்குச் சென்று நல்ல விஷயங்களில் செலுத்தி பழக்கப்படுத்தினால், மனது அவற்றில் பழக்கமாகி விடும். எந்த விஷயங்களில் மனது ஈடுபடுகிறதோ அதிலேயே அது பழக்கமாகிறது.

அதனையே கீதையில், அர்ஜுனன் க்ருஷ்ணனிடம் கேட்கும் பொழுது, 'க்ருஷ்ணா, உலகில் உள்ள ஜனங்கள் பாபம் பண்ணு கிறார்களே! அவர்களுக்கு தாங்கள் பாபம் செய்வது தவறு என்று தெரியாதா? ஈஸ்வரன் என்கிற சத்யமான ஒருவன் இருக்கிறான் என்று

தெரிந்தும் பாபம் பண்ணுகிறார்களே, ஏன்?'' என்று கேட்கிறான். அதற்கு க்ருஷ்ணர், அர்ஜுனனைப் பார்த்து,'' எல்லோரும் பாபம் பண்ணக் கூடாது என்றே விரும்புகிறார்கள். ஆனால், அவர்களால் தங்களின் வாசனை பலத்தின் காரணமாக பாபம் பண்ணாமல் இருக்க முடியவில்லை'' என்று பதிலுரைக்கிறான். ***''எனைப் பிறரிழுக்க''*** - மனது சஞ்சல சுபாவமுள்ளது. வெளியிலிருந்து வரும் விஷயங்கள் நம் மனதை தாக்குவதை நாம் உலகில் ஈடுபடும் பொழுது தெரிவதில்லை. நாம் தியானம் பண்ணும் பொழுது தான் அவை தெளிவாக புரிய வருகிறது.

ஒருவன் சர்வத்தையும் துறந்து விட்டு, தியானத்தில் இருந்தான். அப்பொழுது ஒருவர் அங்கு வந்து, இவனிடம் தான் சென்ற ஊர் பற்றியும், அங்கு நடந்த உத்ஸவம் பற்றியும் விவரித்தார். இதைக் கேட்டதும், இவனுக்கு தானும் அந்த ஊருக்கு போகலாமா, உத்ஸவத்தினைப் பார்க்கலாமா என்ற எண்ணம் தோன்றியது. இது, அவன் காதால் கேட்ட விஷயத்தினால் மனதில் ஏற்பட்ட சஞ்சலம். பிறகு, அவன் ஒரு செய்தித்தாளைப் பார்த்தான். அதில், ஒரு இடத்தில் கச்சேரி நடக்க இருப்பது போட்டிருந்தது. அதைப் படித்தவுடன் இவனுக்கு அந்தக் கச்சேரிக்கு செல்லலாமா என்ற எண்ணம் தோன்றியது. இது இவன் செய்தித்தாளைப் பார்த்து படித்ததினால் ஏற்பட்ட மனதின் சஞ்சலம்.

அடுத்தது, இவனுக்கு ஒரு சமையல் வாசனை வருகிறது. உடனே, இவன் சாப்பிட வேண்டும் என்று நினைக்கிறான். இது நுகர்ந்ததினால் ஏற்பட்ட சஞ்சலம். இவன் என்னவோ, ஆரம்பத்தில் சர்வத்தையும் விட்டு விட்டு தியானம் செய்ய வேண்டும் என்றுதான் சங்கல்பம் செய்து கொண்டான். ஆனால், மனதின் வாசனை இவனை விடவில்லை. இவனை இழுத்துக் கொண்டு உலக விஷயங்கள் ஒன்றில் சம்பந்தம் வைத்துக் கொண்டு மற்றொன்றுக்கு தாவிக் கொண்டே போகிறது.

இப்படி இருக்கும் போது - *ஏனிந்த உறக்கம்* - நீ ஏன் உறங்கிக் கொண்டிருக்கிறாய். நான் உன்னிடம் சர்வதா சரணாகதி செய்துள்ளேன். உன்னுடைய சொத்தாக இருக்கும் என்னை, உலக விஷயங்கள் இழுக்கும் பொழுது நீ வேடிக்கைப் பார்ப்பது உனக்கு அழகா. நீ என்ன தூங்கிக் கொண்டிருக்கிறாயா? என்று வினவுகிறார்.

ஒரு தாயார், குடும்ப வேலை காரணமாக கடைத் தெருவிற்குச் செல்லும் போது, தன் குழந்தையைப் பக்கத்து வீட்டில் இருப்பவர்களிடம் பார்த்துக் கொள்ள சொல்லிச் சென்றாள். அவள் திரும்பி வரும் பொழுது, குழந்தை மண்ணில் அலைந்து விளையாடிக் கொண்டிருந்தால், யாரும் குழந்தையை தவறு சொல்ல மாட்டார்கள். அதைப் பார்த்துக் கொள்ள

வேண்டியவர்களையே தவறு சொல்வார்கள் அல்லவா? மண்ணில் சென்று விளையாடுவது என்பது குழந்தையின் சுபாவம். அதை விட்டால், மண்ணில் சென்று விளையாடாமல் இருக்காது. பொறுப்பாக இருப்பவர்கள் தானே அதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்?

இதையே பகவானும், ''இந்திரிய விஷயங்களில் செல்வது தான் என் மனதின் சுபாவம். அதைக் கட்டுப்படுத்தும் சக்தி எனக்கு இல்லை. எனவேதான் உன்னிடம் சரணாகதி செய்துள்ளேன். அப்படிப்பட்ட என்னுடைய மனதை வெளி விஷயங்களில் செல்லாமல் தடுத்து நிறுத்துவது உனது பொறுப்பாகும். அப்படி இல்லாமல் வேடிக்கை பார்ப்பது உனக்கு அழகா'' என்று அருணாசலேஸ்வரனைப் பார்த்து சொல்கிறார்.

மேலும், இதனை நாயகியாய்ச் சொல்லும் பொழுது, ''என்னை மற்றவர்கள் பார்த்து ஆசைப்படுகிறார்கள். என்னை விவாஹம் செய்து கொள்ள பலவிதமான முயற்சி செய்கிறார்கள். உனக்காகவே இருக்கக் கூடிய என்னைப் பார்த்து பலர் இவ்வாறு ஆசைப்படுவது உனக்கு விருப்பமோ? உன் நாயகியான என்னைப் பார்த்து வெளி மனிதர்கள் ஆசைப்படுவதை நீ வேடிக்கைப் பார்க்கிறாயே. இது உனக்கழகா'' என்கிறார் பகவான்.

(தொடரும்)

தொகுப்பு : **முரளீதர தாஸன்**

---


பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ''அருணாசல அக்ஷர மண மாலை'' ஸ்ரீ குருஜியின் உபன்யாஸ கேசட்டுகள் - மூன்றாம் பாகம் - (7 காஸெட்டுகள்) வெளி வந்துள்ளன.

**கிடைக்கும் இடங்கள்:**

**1. ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட்,**
20, அலமேலுமங்காபுரம்,
மைலாப்பூர்,
சென்னை - 600 004.
Phone : 4935037

**2. ஸ்ரீ S. பாலகிருஷ்ணன்**
37/19, D.S. அபார்ட்மெண்ட்ஸ்,
பிள்ளையார் கோயில் தெரு,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.
Phone : 4895529 PP

# நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ குருஜியின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று ''ஹரி நாம சங்கீர்த்தனம்'' செய்ய சித்தமாக உள்ளது. இந்த நாம ஸங்கீர்த்தனத்தில்

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''*

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்திரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள், மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நாம சங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச் செலவோ கிடையாது. இதில் ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்சனைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம கீர்த்தனம் தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்பவும்.

*முகவரி :*

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**
'ப்ரேமிக பவனம்',
24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை,
சென்னை-600 083.

# செய்திகள்

## ஏப்ரல் 5-ந் தேதி முதல் 7-ந் தேதி வரை

ஸ்ரீ குருஜி, *பெங்களூர்* விஜயம் செய்து "*ராதா கல்யாணம்*" நிகழ்த்தினார்கள்.

---

## ஏப்ரல் 14-ந் தேதி

சென்னை ப்ரேமிக பவனில் *தமிழ் வருஷப் பிறப்பை* முன்னிட்டு காலை 8 மணியளவில் ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைப்பெற்றது. காலை 9½ மணியளவில் பஞ்சாங்க படனமும் இரவு 9 மணியளவில் திவ்ய நாம சங்கீர்த்தனமும் நடைபெற்றன.

---

## ஏப்ரல் 16-ந் தேதி

சென்னை ப்ரேமிக பவனில் *ஸ்ரீ ராம நவமி* உத்ஸவம் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இரவு திவ்ய நாம சங்கீர்த்தனம் நடைப்பெற்றது.

---

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

## மே 2-ந் தேதி முதல் 4-ந் தேதி வரை

ஸ்ரீ குருஜி அவர்கள், தஞ்சை ஜில்லாவிலுள்ள *புலியூருக்கு* விஜயம் செய்து அங்கு நடக்கும் *யாகத்தில்* கலந்து கொள்கிறார்கள்.

---

## மே 6-ந் தேதி முதல் 8-ந் தேதி வரை

ஸ்ரீ குருஜி அவர்கள், *மயிலாப்பூர், அலமேலுமங்காபுரத்*திலுள்ள *ஸ்ரீ ரமண கேந்திராவில்* ஸ்ரீ ரமணரின் "*உபதேச உந்தியார்*" பற்றி ப்ரவசனம் செய்கிறார்கள்.

---

## மே 9-ந் தேதி

அக்ஷய த்ருதியை

---

## மே 10-ந் தேதி, 11-ந் தேதி

*மதுரபுரி* ஆஸ்ரமத்தில் '*ஸ்ரீ ஸீதா கல்யாணம்*' கொண்டாடப்படும்.

---

## மே 20-ந் தேதி

'ஸ்ரீ நரஸிம்ஹ ஜயந்தி'

---

## மே 22-ந் தேதி

ஸ்ரீ மஹா பெரியவாளின் ஜயந்தி - *கும்பகோணத்தில்* ராம மண்டபத்தில் கொண்டாடப்படும்.

---

## ஜுன் 1-ந் தேதி முதல் 4-ந் தேதி வரை

*மயிலாப்பூர்* அலமேலுமங்காபுரத்திலுள்ள ஸ்ரீ ரமண கேந்திராவில் ஸ்ரீ ரமணரின் '*உபதேச உந்தியார்*' பற்றி ஸ்ரீ குருஜியின் சொற்பொழிவுகள்.

மங்களானி பவந்து

# மதுரமுரளி

Registered as Newspaper in India

R. No. 62828/95
Single Copy Rs. 5/-

Regd. No. TN/MS/(S)/714
Annual Subs. Rs. 60/-

| வேணு : 2 | மே 1997 | கானம் : 10 |
|---|---|---|





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar